DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.219/2022**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | பூமிநாதன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ராமன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.02.2026

1-ம் எதிரி மாரிமுத்து ஆஜர். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் செட்டியேந்தல் கிராமத்தில் வசித்து டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் சிறுவனூருக்கு என் சொந்த வேலை விசயமாக சென்றிருந்தேன். அப்போது சிறுவனூரில் தேவகோட்டை தாலுகா போலீசார் அங்கு நடந்த சண்டை சம்பந்தமாக விசாரித்து, அந்த இடத்தில் வந்து விசாரித்ததற்காக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள், போட்டு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2ம் கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன்பேரில் இந்நீதிமன்றம் அனுமதி வழங்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

கடந்த 27.09.2021ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது கடந்த 27.09.2021ம் தேதி பகல் 11 மணிக்கு சிறுவனூரில் நடந்த பிரச்சனை தொடர்பாக, சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், அவர் தயார் செய்த பார்வை மகஜரில் 2 வதாக கையொப்பம் போட்டுவிட்டு, தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை</u>**

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.